செ.வெ.எண். 04/ பிப்ரவரி தேதி 05.02.2016

**செய்தி வெளியீடு**





2016 சட்டமன்ற தேர்தலையொட்டி மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் லாரி மூலம் தருமபுரி மாவட்ட ஆட்சியரகத்திற்கு வந்து இறங்கியதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (05.02.2016) பார்வையிட்டு ஆய்வு செய்து பின்னர் செய்தியாளர்களிடத்தில் தெரிவித்ததாவது :-

2016 சட்டமன்ற தேர்தலையொட்டி தருமபுரி மாவட்டத்திற்குட்பட்ட 5 சட்டமன்ற தொகுதிகளுக்கு தேவையான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பீகார் மாநிலம் வெஸ்ட்சேம்பரா, சேக்புரா மாவட்டங்களில் இருந்து 1832 கண்ட்ரோல் யூனிட்களும் 2237 பேலட் யூனிட்களும் வந்துள்ளன இவைகள் அனைத்தும் சரிபார்க்கப்பட்டு பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டுள்ளது. இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மின்னணு வாக்குப்பதிவு இயந்திர அறைக்கு 24 மணி நேர காவல் துறையினரின் பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர் ஜெ.லோகநாதன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.சங்கர், சிறப்பு திட்ட செயலாக்கம் தனி துணையாட்சியர் திரு.மு. பிச்சைராமன், தேர்தல் வட்டாட்சியர் திருமதி. லதா உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.